# 13

## நத்ர், கஃப்பாரா

'நத்ர்' எனும் அறபு வார்த்தைக்கு நேர்ச்சை வைத்தல் என்பது பொருளாகும். இஸ்லாத்தில் ஸுன்னத்தானதொரு காரியத்தை கடமையாக்கிக் கொள்வது 'நத்ர்' என அழைக்கப்படுகின்றது. உதாரணமாக 'அல்லாஹ்வுக்காக ஒருநாள் நோன்பிருப்பேன்' எனக் கூறுவது போலாகும்.

நேர்ச்சை தொடர்பான குர்ஆன், ஸுன்னா ஆதாரங்கள் சிலவற்றை நோக்குவோம்

وَلْيُوْفُوْا نُذُوْرَهُمْ

- "அவர்கள் தமது நேர்ச்சைகளை நிறைவேற்றட்டும்" (அல்குர்ஆன் 22:29)

مَنْ نَذَرَ أَنْ يُطِيْعَ الله فَلْيُطِعْهُ وَمَنْ نَذَرَ أَنْ يَعْصِيَهُ فَلاَ يَعْصِه

- "அல்லாஹ்வுக்கு வழிப்பட நேர்ச்சை வைத்தவன் அவனுக்கு வழிப்படட்டும். அவனுக்கு மாறு செய்ய நேர்ச்சை வைத்தவன் அவ்வாறு மாறு செய்யாதிருக்கட்டும்" (அஹ்மத்).

### நேர்ச்சை இருவகைப்படும்

- **அனுமதிக்கப்பட்ட நேர்ச்சை:** எவ்வித நிபந்தனைகளுமின்றி, அல்லாஹ்வை நெருங்கும் நோக்கில் நேர்ச்சை வைத்தலாகும். உதாரணமாக, 'பசித்தோருக்கு உணவளிப்பது என்மீது கடமை' எனக் கூறுவது போலாகும். இவ்விதம் நேர்ச்சை வைத்தவர் அந்நேர்ச்சையை நிறைவேற்றுவது பர்ளாகும்.

- **முறைதவறிய நேர்ச்சை:** பாவமான காரியத்தை அல்லது பர்ளான காரியத்தைச் செய்வதாக நேர்ச்சை வைத்தல், ஹலாலான ஒன்றை ஹராமானதாக்க நேர்ச்சை வைத்தல் போன்ற வகையிலான நேர்ச்சைகள் இதிலடங்கும்.

நேர்ச்சைகள் நிறைவேற்றப்பட வேண்டும். அவை நிறைவேற்ற முடியாது போனால் அதற்குப் பதிலீடு செய்தல் வேண்டும். இப்பதிலீடே 'கப்பாரா' எனப்படுகிறது.

## கஃப்பாரா - குற்றப்பரிகாரம்

'க.ஃ.ப்பாரா' என்ற அறபுச் சொல்லுக்கு மறைத்தல், மூடுதல் என்பன பொருளாகும். நேர்ச்சை வைத்து இவை நிறைவேற்றப்படாது போனால் அல்லது சத்தியம் செய்து அதனை முறித்தால் கப்பாரா மூலம் நிவர்த்தித்தல் வேண்டும்.

''உங்கள் சத்தியங்களில் வீணானவற்றைக் கொண்டு அல்லாஹ் உங்களைக் (குற்றம்) பிடிக்கமாட்டான். எனினும் (ஏதேனுமொன்றை) உறுதிப்படுத்த நீங்கள் செய்யும் சத்தியத்தைப் பற்றி (அதில் தவறினால்) உங்களைப் பிடிப்பான். எனவே (அதில் தவறி) சத்தியத்தை முறித்து விட்டால், அதற்குப் பரிகாரமாவது, நீங்கள் உங்கள் குடும்பத்தினருக்கு உண்ணக் கொடுக்கும் ஆகாரத்தில், மத்திய தரமான (ஆகாரத்)திலிருந்து பத்து ஏழைகளுக்கு உண்ணக் கொடுப்பதாகும் அல்லது அவர்களுக்கு ஆடை அணிவித்தலாகும் அல்லது ஓர் அடிமையை விடுதலை செய்வதாகும். ஆகவே எவர் (பரிகாரத்திற்குரிய எதனையும்) பெறவில்லையோ அப்போது மூன்று நாட்கள் நோன்பு (குற்றப் பரிகாரம்) ஆகும். இதுதான் உங்களுடைய சத்தியங்களுக்கு, நீங்கள் சத்தியம் செய்து (முறித்து) விட்டால் பரிகாரமாகும். இன்னும் நீங்கள் உங்கள் சத்தியங்களை (பேணிக்) காப்பாற்றிக் கொள்ளுங்கள். நீங்கள் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதற்காக அவன் தன்னுடைய வசனங்களை இவ்வாறு உங்களுக்கு விளக்குகிறான்'' என்று அல்குர்ஆன் கூறுகின்றது. (அல்குர்ஆன் 5:89)

சத்தியத்தை முறித்தலுக்கும், நேர்ச்சையை நிறைவேற்றாமைக்கும் பரிகாரமாக கப்பாரா வழங்க வேண்டும் என்பதை அல்குர்ஆனின் 5:89ஆவது வசனம் எடுத்துக் காட்டுகின்றது.

அதன்படி,

- பத்து ஏழைகளுக்கு உணவளித்தல் அல்லது
- பத்து நபர்களுக்கு உடையளித்தல் அல்லது
- ஓர் அடிமையை விடுதலை செய்தல் வேண்டும்.

இவற்றிலொன்றைச் செய்ய வழியில்லாதபோது மூன்று நாட்கள் நோன்பிருத்தல் வேண்டும்.

### க.ஃ.ப்பாரா கொடுக்க வேண்டியவர்கள்

- ஏதாவதொன்றைச் செய்வதாக நேர்ச்சை வைத்து, அந்நேர்ச்சையை நிறைவேற்றாது விட்டு விட்டவர்.
- தனக்கு உரிமையில்லாத ஒன்றை தர்மம் செய்வதற்கு நேர்ச்சை வைத்தவர்.
- தன்னால் செய்ய முடியாத விடயத்தை நேர்ச்சை வைத்தவர்.
- அல்லாஹ் ஹலாலாக்கியதொரு விடயத்தை நேர்ச்சை மூலம் ஹராமாக்கிக் கொண்டவர்.
- பொய்ச் சத்தியம் செய்தவர்.

**பயிற்சி:**

1. நத்ர் என்பதன் பொருள் யாது? எவ்வாறான காரியங்களில் நத்ர் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது?
2. நத்ர் செய்வதற்கு அனுமதிக்க முடியாத காரியங்களைக் குறிப்பிடுக.
3. எத்தகைய சந்தர்ப்பங்களில் கப்பாரா கொடுக்க வேண்டும்?